தேதி: **21.08.2020**

சுற்றறிக்கை

பொருள்: மதுரை காமராசர் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி ஏப்ரல் 2020 – தேர்வு கட்டணம் செலுத்துதல் - சம்பந்தமாக

பார்வை: தமிழக அரசாணை (டி) எண்.111, உயர்கல்வித் துறை, தேதி: 27.07.2020

*****

பார்வையில் காணும் அரசின் ஆணைக்கிணங்க மதுரை காமராசர் பல்கலைக்கழக தொலைதூர கல்வி ஏப்ரல் 2020 தேர்விற்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும் குறிப்பிட்ட வழிமுறைகளை பின்பற்றி தேர்வு முடிவுகளை அறிவிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் இதற்கு முந்தைய தேர்வில் தேர்ச்சி பெறாமல் இருந்தால் அத்தேர்வுகளை பின்னர் எழுத வேண்டும். அவர்களது தேர்வு முடிவுகள் வெளியிடப்பட மாட்டாது.

அரசு வழங்கிய மதிப்பீட்டு முறையில் உடன்பாடு இல்லாத மாணவர்கள் பின்னர் நடத்தப்படும் தேர்வில் பங்கு பெற்று அவர்களின் மதிப்பெண்களை உயர்த்திக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு ஆணையின்படி 2019-20 கல்வி ஆண்டில் ஏப்ரல் 2020 தேர்விற்கு தேர்வு கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவேண்டும். பதிவு செய்த மாணவர்களுக்கு மட்டும் அரசாணையில் கூறிய வழிமுறைகள் பொருந்தும்.

இறுதியாண்டு மாணவர்களுக்கான ஏப்ரல் 2020 தேர்வுகள் அரசு வழிகாட்டுதல்கள் வந்த பின்னர், அதன் வழிகாட்டு முறைகள் பின்பற்றப்படும். இறுதியாண்டு மாணவர்களும் தேர்வு கட்டணம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள்.

எனவே மேலே குறிப்பிட்ட மாணாக்கர்கள் ஏப்ரல் 2020 தேர்வு கட்டணத்தை பல்கலைக்கழக இணைய வழி (**www.mkuniversity.ac.in**) வாயிலாக செலுத்தி அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 28.08.2020 க்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்(பொ)

குறிப்பு:-

மாணாக்கர்கள் நவம்பர் 2019 ற்கான தேர்வு முடிவுக்காக காத்திருக்க வேண்டாம் எனவும் தெரிவிக்கலாகிறது.